Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 02 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 17 (16.05.2006) செவ்வாய்க்கிழமை இதழ் 228

# இராணுவத்துடன் இணைந்தே கருணா குழு செயற்படுகிறது!

## போதிய ஆதாரம் இருக்கிறது என்கிறார் ஹென்றிக்சன்



உல்ப் ஹென்றிக்சன்

கொழும்பு —

கருணாகுழுவுடன் அரசு மற்றும் இராணுவத்தினர் இணைந்து செயற்படுவதை நிரூபிக்க தம்மிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் யுத்தத்தில் இறுதி வெற்றியை எட்டும் வகையில் எந்தவொரு தரப்புமே இராணுவ பலத்தைக் கொண் டிருக்கவில்லை. (08 ஆம் பக்கம் பார்க்க)

## சேமமடுவில் படையினர் கிளைமோர் தாக்குதல்!

வவுனியா —

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் இரண்டு அப்பாவி இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

வவுனியா - சேமமடுவில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - பஞ்சலிங்கம் தயாபரன், கந்தசாமி சனா ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கந்தசாமி சனா மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்தவேளை இந்த இரு இளைஞர்களையும் இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக தமிழீழ காவல்துறை தெரிவித்தது.

## போதிய ஆதாரம் இருக்கிறது என்கிறார் ஹென்றிக்சன்



உல்ப் ஹென்றிக்சன்

கொழும்பு —

கருணாகுழுவுடன் அரசு மற்றும் இராணுவத்தினர் இணைந்து செயற்படுவதை நிரூபிக்க தம்மிடம் போதிய ஆதாரங்கள் இருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் யுத்தத்தில் இறுதி வெற்றியை எட்டும் வகையில் எந்தவொரு தரப்புமே இராணுவ பலத்தைக் கொண் டிருக்கவில்லை. (08 ஆம் பக்கம் பார்க்க)

## சேமமடுவில் படையினர் கிளைமோர் தாக்குதல்!

வவுனியா —

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் இரண்டு அப்பாவி இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

வவுனியா - சேமமடுவில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - பஞ்சலிங்கம் தயாபரன், கந்தசாமி சனா ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் கந்தசாமி சனா மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்தவேளை இந்த இரு இளைஞர்களையும் இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக தமிழீழ காவல்துறை தெரிவித்தது.

## கருணாகுழு உறுப்பினர் மட்டக்களப்பில் பலி!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - போதனா வைத்தியசாலைக்குள் வைத்து கருணாகுழு உறுப்பினர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமாலை 4.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பொலனறுவ காசங்குளத்தில் ஏப்ரல் 30 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அரசரட்ணம் சுரேஷ்குமார் கடந்த 10 ஆம் திகதி மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இவருக்கு உதவியாக வைத்தியசாலையில் கீதபொன்கலன் (08 ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் வீடு புகுந்து படையினர் தாக்குதல்!

### ஆறு பொதுமக்கள் படுகாயம்

தென்மராட்சி —

தென்மராட்சி - மீசாலையில் வீடொன்றினுள் புகுந்த இராணுவத்தினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரை கண்மூடித்தனமாகத் தாக்கி படுகாயப்படுத்தினர்.

காயமடைந்த ஆறுபேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கந்தசாமி ஜெயகுமாரலிங்கம் (வயது 59), இவரது மனைவி ஜெயகுமாரலிங்கம் (08 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்றுமாலை பரவலான கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் நேற்றுமாலை இராணுவத்தினர்மீது பரவலாகக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

நேற்று மாலை 5.45 மணியளவில் கல்வியங்காடு சட்டநாதர் கோயில்வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்து கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து இராணுவத்தினரும் சுமார் 5 நிமிடம் பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிய வருகிறது. (08 ஆம் பக்கம் பார்க்க)

# நிலாவரையில் இரு வர்த்தகர்கள் ஆயுதக்குழுவினரால் படுகொலை?

புத்தூர் —

புத்தூர் - நிலாவரை சந்திப்பகுதியில் வர்த்தகர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

புத்தூர் - புன்னாலைக்கட்டுவன் வீதியில் நிலாவரை சந்தியில் அமைந்துள்ள தேநீர்க் கடை மற்றும் ஈவினை செல்லும் வீதியில் அமைந்துள்ள பலசரக்குக்கடை ஆகியவற்றின் உரிமையாளர்களான தியாகராஜா கிருபாகரன் (வயது 27), ஜெயரட்ணம் ஜெயகாந்தன் (வயது 25) ஆகிய இருவருமே நேற்றுமுன்தினம் இரவு காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் நிலாவரை சந்திப் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதை அடுத்து வர்த்தக நிலையங்களில் தங்கியிருந்த இருவரையும் உறவினர்கள் தேடிச்சென்ற வேளை அங்கு இருவரையும் காணவில்லை எனவும் தெரியவருகிறது.

அத்துடன், இருவர்த்தக நிலையங் களுக்குள்ளும் இரத்தக் கறைகளும், தசைத்துண்டுகளும், வெற்று ரவைகளும், தொலைத்தொடர்பு சாதன அன்ரனாக்களும் சிதறிக்காணப்பட்டன.

துப்பாக்கிவேட்டுச் சத்தம் கேட்ட பின்னர் வாகன இரைச்சல் கேட்டுள்ளதால் இவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர் - சடலங்களை வாகனத்தில் கொண்டு சென்று வேறு இடங்களில் போடப்பட்டிருக்கலாம் (08 ஆம் பக்கம் பார்க்க)

# பதில் தாக்குதலுக்கு படையணிகள் தயார்!

### ரொய்ட்டர் செவ்வியில் புலித்தேவன்

கிளிநொச்சி —

விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அதற்கான பதில்தாக்குதலை நடத்த நாம் தயாராகவே உள்ளோம் என விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய தொலைபேசி நேர்காணலிலேயே புலித்தேவன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறுகையில் -

இலங்கையில் உக்கிரமற்ற - தணிவான ஒரு போர் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என அண்மையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் வெளியிட்ட கருத்து சரியானதே! அவரது கருத்தில் எந்த சந்தேகமும் இல்லை.

தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இந்தப் போரை அரச படைகள் உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு துணை ஆயுதக்குழுவினரின் ஆயுதங்களைக் களைய வேண்டும்.

விமானப்படை விமானங்கள் எமது மக்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி வருகின்றன. ஆகவே எமது மக்களின் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு இது தருணம் அல்ல.

அரசபடைகளது நீதிக்குப் புறம்பான படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும். துணை ஆயுதக்குழுவினரது ஆயுதங்கள் களையபபடவேண்டும்.

எம்மீது தாக்குதல் நடத்தப்பட்டால் நாங்கள் உறுதியாக தாக்குதல் நடத்துவோம். எமது படையணிகள் தயார்நிலையிலேயே உள்ளன எனத் தெரிவித்தார்.



தீவகத்தில் நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலை அடுத்து பாதுகாப்பான இடங்களை நாடிச்செல்லும் அல்லைப் பிட்டிப் பகுதி மக்கள்! *(படம்: ரொய்ட்டர்)*

# குமுதினி படுகொலை நினைவு தினம்

# உணர்வு பூர்வமாக நேற்று அனுஷ்டிப்பு

நெடுந்தீவு —

குமுதினிப் படுகொலையின் 21 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நெடுந்தீவில் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணிக்கு படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக மாவிலித்துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு எஸ்.அருள்நேசன் அடிகளாரால் நினைவுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

நினைவுச் சுடரை நெடுந்தீவு பங்குத் தந்தை மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவுகளும் ஏற்றிவைக்க, நினைவுத் தூபிக்கான மலர் மாலையை நெடுந்தீவு பிரதேச பல.நோ.கூ. சங்கத் தலைவர் சு.கோபாலசிங்கம் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட பொது அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலநூற்றுக் கணக்கானோரும், உறவுகளை பறிகொடுத்த உறவுகளும் கண்ணீர் மல்க தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.

பங்குத் தந்தையால் குமுதினி படகும் ஆசிர்வதிக்கப்பட்டது. காலை 9 மணிக்கு தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தில் போதகர் வணபிதா ஆர்.யோன்செல்வம் நினைவுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்ததுடன் காலை 8 மணிக்கு நெடுந்தீவு மேற்கு நெழுவினி பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம் பெற்றது.

இதேவேளை, நேற்று நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்கான போக்குவரத்துக்கள் இடம் பெறாததுடன் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு அனைவராலும் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# கைதுகள், காணாமல்போதல் முறைப்பாடு; ஏற்பதற்குப் பொலிஸார் அசிரத்தை!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக காணாமல் போகும் இளைஞர்கள் குறித்து - உறவினர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாட்டைப் பதிவு செய்யச் செல்லும் போது பொலிஸாரால் தட்டிக் கழிக்கப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் நாள்தோறும் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும், காணாமல் போவதும், கடத்திச் செல்லப்படுவதும் வழமையாகிவிட்டது.

இந்தச் சம்பவங்கள் குறித்து உறவினர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யச் செல்லும் போது அவர்களைப் பொலிஸார் அலட்சியப்படுத்தி வருவதோடு, முறைப்பாட்டைப் பதிவு செய்யாது தட்டிக் கழித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிலையங்களில் இவ்வாறு முறைப்பாடுகளைப் பதிவு செய்யாது தட்டிக் கழித்து வருவதால், பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் இளைஞர்கள் காணாமல் போவது தொடர்பாக, உறவினர்கள் இராணுவ முகாம்களுக்கும், பொலிஸ் நிலையங்களுக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் போன்றவற்றுக்கும் அலைந்து திரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம் —

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

இந்தத் திருவிழாக் காலங்களில் தேர் உற்சவத்தைத் தவிர இதர பகல் விழாக்கள் உள் வீதியில் நடைபெறுவதுடன், மாலை நேர விழாக்கள் இரவு 7 மணியுடன் முடிவுறுமென ஆலயநிர்வாகம் தெரிவித்துள்ளது.

☆ ☆ ☆

யாழ்ப்பாணம் —

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 15 தினங்களாக நடைபெறும் திருவிழாவில் - எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

## மானிய விலையில் தூறல் நீர்பாசன கருவிகள்

யாழ்ப்பாணம் —

தொல்புரம் கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்குத் தூறல் நீர்ப்பாசனத்துக்குரிய கருவிகள்- மானிய விலையில் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்கான நடவடிக்கைகளைப் பெரும்பாக உத்தியோகத்தர் சா.குகநேசன் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தூறல் நீர்ப்பாசனக் கருவிகளை - மானியமாக 15 ஆயிரம் ரூபாவும், மிகுதி 15 ஆயிரம் ரூபாவை மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதாள உலகக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்கியவர் கைதாம்!

கொழும்பு —

பாதாள உலகக் குழுவுக்கு ஆயுதம் வழங்கியதாக விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர் என சந்தேகிக்கப்படும் இராஜேந்திர மகேஸ் சின்னையா கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்துப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.டபிள்யூ.பிரதாபசிங்க கூறியுள்ளதாவது -

விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சின்னையா உட்பட 9 பேரை கைது செய்துள்ளோம். சின்னையாவிடம் பாதாள உலகக் குழுவினர் ஆயுதங்களை வாங்கியுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன்; மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதையடுத்து விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவினரை கைது செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கம்பஹா பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளைக் கைது செய்ய விசேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கைகளால் அவர்கள் கம்பஹா பகுதியில் ஊடுருவியிருக்கக்கூடும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாந்த ராஜபக்ஷ கூறியதாவது -

தென்னிலங்கையில் உள்ள பாதாள உலகக் குழுவினரை விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதற்கு பிரதான காரணம், தங்களது நடவடிக்கைகளால் தங்கள் மீது குற்றம் சுமத்தப்படாமல் பாதாள உலகக் குழுவினர் நடத்தியதாகத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான்.

நாட்டில் குழப்ப நிலைமையை உருவாக்க இந்தப் பாதாள உலகக் குழுவினரை விடுதலைப் புலிகள் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். அரசியல் படுகொலைகள் மற்றும் சட்ட ஒழுங்கு சீர்குலைவுக்காக திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. தற்போது கைது செய்யப்பட்டுள்ள சின்னையா, கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றரையாண்டு காலம் செயற் பட்டுள்ளார். மாதம் ஒரு முறை அவர் கிளிநொச்சிக்கும் சென்று வந்துள்ளார்.

பாதாள உலகக் குழுவினருக்கு ஆயுதங்களை வழங்கியதாக சின்னையா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

கொழும்பு, மொனறாகலை, அம்பாந்தோட்டை மற்றும் பண்டாரவளை பாதாள உலகக் குழுவினரை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்று புலிகளின் முகாம்களில் ஆயுதப் பயிற்சி அளித்திருப்பதாகவும் சின்னையா தெரிவித்தார்.

ரி-56 துப்பாக்கிகள், 9மி.மீ கைத்துப்பாக்கிகள், மைக்ரோ பிஸ்டல் மற்றும் கைக்குண்டுகளைப் பாதாள உலகக் குழுவுக்கு விற்பனை செய்ததாகவும் சின்னையா கூறினார். 80ஆயிரம் ரூபா மதிப்புள்ள ரி-56 துப்பாக்கிதான் பாரிய தேவையாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் இணைவதற்கு முன்னதாக நீண்டகாலமாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவில் சின்னையா இருந்துள்ளார். தொடக்கத்தில் தமிழ் நாட்டின் கொளத்தூர் பயிற்சி முகாமில் அவர் பயிற்சி எடுத்திருக்கிறார்.

பிலியந்தல பகுதியில் வர்த்தகம் செய்வது போன்று தான் இந்த ஆயுத விற்பனையை மேற்கொண்டதாகவும் சின்னையா விசாரணைகளில் தெரிவித்தார். பாதாள உலகக் குழுவினர் சின்னையாவிடமிருந்து ஆயதங்களைப் பெறுவது குறித்து தகவல் எமக்குக் கிடைத்தது. அதன் பின்னர் பாதாள உலகக் குழுவினர் மூலமாக சின்னையாவின் கைத்தொலைபேசி எண்ணை பெற்றோம்.

சின்னையாவின் கைத்தொலைபேசியில் அழைத்து நாங்கள் பாதாள உலகக் குழுவினர் என்றும் ஐந்து - ரி-56 துப்பாக்கிகள் கேட்டோம். அதன் மதிப்பு 4 இலட்சம் ரூபா என்று சின்னையா கூறினார்.

அதற்கடுத்த 3 நாட்களுக்குள் சின்னையா எம்மை தனியாகச் சந்திக்க ஒப்புக்கொண்டார். பணத்துடன் சீதுவ பௌத்த ஆலயத்துக்கு வருமாறு அவர் கூறினார். இந்த ஆயுத விற்பனை நடவடிக்கைக்காக அந்த இடத்தை அவர் தொடர்ந்து பயன்படுத்தியுள்ளார்.

5 பொலிஸ் குழுக்கள், பாதாள உலகக் குழுவினராக சம்பவ இடத்துக்கு வேறு வாகனங்களில் சென்று இறங்கினோம். எமது பொலிஸார் அந்த ஆலயத்தை முற்றுகையிட்டு இருந்தனர்.


எமது குழுவைச் சேர்ந்தவர்களை சின்னையா சந்தித்தார். அப்போது அவர் ரி-56 துப்பாக்கி மற்றும் 30 தோட்டாக்கள் கொண்ட மகசீனை எடுத்து வைத்தார். எங்களது பேரம் முடிந்த போது அவர் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் அவர் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சீதுவ பிரதேசத்தில் தனண்டுகம கால்வாயில் 20 அடி ஆழத்தில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. கம்பஹா பொலிஸார் அவற்றைக் கைப்பற்றினர்.

தன்னோடு தொடர்படைய பாதாள உலகக் குழுவினரது பெயரையும், சின்னையா வெளியிட்டார். இது வரை மொத்தம் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முதல் நபர் கலகமுவ பகுதியில் 2 ரி- 56 துப்பாக்கிகள் மற்றும் 57 தோட்டாக்களுடன் கூடிய 2 மகசீன்கள் ஆகியவற்றுடன் ஒரு சந்தேக நபரை கைது செய்தோம்.

தம்புத்தெகமுவ, நொச்சியாகம, இராஜாங்கன, தெஹிவளை, மின்னேரிய மற்றும் கெக்கிராவ ஆகிய பகுதிகளில் மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரிடமும் ரி -56 துப்பாக்கிகள் அல்லது கைத்துப்பாக்கிகள் இருந்தன.

சின்னையாவின் ஆயுத விற்பனைக்கு உதவிய சந்தேகத்தின் பேரில் ரட்டுலவ மற்றும் தெலகொடவில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதாள உலகக் குழுவினருக்கு ஆயுதங்கள் வழங்கிய பணியை மட்டும் சின்னையா செய்திருக்க முடியாது என்று நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.





கிளரீசியன் மறைபோதக குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தை சவரிமுத்து மரியஸ்ரீபன் சதீஸ் அடிகளார் தனது முதல் நன்றித் திருப்லியை மாரீசன் கூல் புனித கயித்தார் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்புக் கொடுத்தபோது பங்குமக்களால் அழைத்துவரப்படுவதையும், குருக்களோடு திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- சில்லை தாஸ்)

# வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் கலப்படப் பெற்றோல் விற்பனை

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாட்டை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சில வர்த்தகர்கள் - பெற்றோலைக் கலப்படம் செய்து விற்பனை செய்வதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வடமராட்சி நெல்லியடிப் பிரதேசத்தில் இவ்வாறான கலப்படம் செய்யப்பட்ட எரிபெருள் விற்பனை அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட நேரம் காத்து நின்று எரிபொருட்களை பொது மக்கள் கொள்வனவு செய்துவரும் நிலையில், இவ்வாறு கலப்பட விற்பனை பொதுமக்களை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

அண்மைக் காலமாக குடா நாட்டில் நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாடு நிலைமையை தமக்குச் சாதமாக்கும் வர்த்தகர்களே இவ்வாறு கலப்படவிற்பனையில் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிப்பதுடன், சில தனியார் விற்பனை நிலையங்களிலும் அதி உச்ச விலையில் பெற்றோல் விற்பனை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மனோகரா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
S.J.சூர்யா - நயன்தாரா
நடித்த
கள்வனின் காதலி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களை களையவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு —

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களைக் களையவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க பொஸ்டன் நகர தமிழ் மையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ரணில் விக்கிரமசிங்க உரைநிகழ்த்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இணைத் தலைமை நாடுகள் அல்லது இந்தியா உறுதியான நடவடிக்கை எடுத்தால் தான் சமாதான முயற்சிகள் முறிவடைவதைத் தடுக்க முடியும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் சீர்குலைய துணை இராணுவக் குழுக்களே முக்கிய காரணம். துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்கள் களையப் படவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

தனது ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சு விபரங்களையும் இந்தக் கூட்டத்தில் ரணில் விவரித்தார்.

# இறைவரி திணைக்கள குறைபாடே வற் வரி மோசடிக்கு காரணமாம்!

## கணக்காய்வாளர் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு —

தெற்காசியாவை உலுக்கிய இலங்கையின் வற் வரி மோசடிக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மோசமான நிர்வாகம்தான் காரணம் என்று கணக்காய்வாளர் அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள விடயங்களாவன -

இலங்கையின் உள்நாட்டு இறைவரி திணைக்களமானது 52 நிறுவனங்களிடமிருந்து 584,21,85,745 ரூபாவை வசூலிக்கவில்லை. இறைவரி திணைக்களத்தின் இயலாமையால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வற் வரி மோசடியானது 57,33,72,866 ரூபாவாகும். ஒரு தனியார் 20 நிறுவனங்களின் பெயரில் 235 காசோலைகளை 13 போலி அடையாள அட்டைகள் மூலமாக தாக்கல் செய்துள்ளார்.

ஒரே நபர் 235 காசோலைகளை போலியாகக் கொடுத்ததைக் கூட இறைவரி திணைக்களத்தால் கண்டறிய முடியாமல் போயிருக்கிறது. அதுவும் இதில் 3 காசோலைகள் ஒரே நாளில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 - 26 இற்கிடையே 45,90,81,571 ரூபாவுக்காக அந்த நபர் 26 காசோலைகளையும் மே 11 - 13 இல் 20,56,92,256 ரூபாவுக்கு 8 காசோலைகளையும் அளித்துள்ளார்.

மேலும் ஒகஸ்ட் 11 - 12 இல் 22,42,47,814 ரூபாவுக்கு 9 காசோலைகளையும் அவர் வருவாய் திணைக்களத்திடம் கையளித்துள்ளார்.

20 நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 2607,24,12,498 ரூபாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளதாகவும் அந்த நபர் தெரிவித்துள்ளார். ஆனால் உண்மையில் அந்த நபர் 4 நிறுவனங்கள் மட்டுமே நடத்தியுள்ளார்.

மொத்தம் 34,03,54,277 ரூபாவுக்குத்தான் ஏற்றுமதி செய்துள்ளார். 16 நிறுவனங்கள் போலியானதாக அவர் காட்டியுள்ளார்.

மேலும் 98.96 வீத கணக்குகள் பொய்யானவை என்று தெரியவந்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 8 மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருவாய் 0.79 வீதம் மட்டுமே என்றும் கணக்காய்வாளர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு இராஜதந்திர பணிகளில் ஆதரவாளரை நியமிக்க மகிந்த முடிவு



கொழும்பு —

வெளிநாடுகளில் இலங்கைக்கான இராஜதந்திரப் பணிகளில் தனது தேர்தல் வெற்றிக்காகப் பாடுபட்ட அரசியல் ஆதரவாளர்களை நியமிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருப்பதால் அரசாங்கத்தில் கடும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைக்கான தூதரகங்களின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல் ஒன்றை வெளிவிவகார அமைச்சருக்கு மகிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ளார்.

அந்தப் பட்டியலில் உயர்தரப் பரீட்சை கூட தேர்ச்சியடையாத நபர்களும் இடம்பெற்றுள்ளது குறித்து உயர் அதிகாரிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். அப்படியான ஒரு நபர் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான முதன்மை செயலாளர் என்ற பொறுப்பில் நியமிக்கப்படவுள்ளார்.

மகிந்தவின் தேர்தல் வெற்றிக்காக பாடுபட்டவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக இத்தகைய நபர்கள் நியமிக்கப்படுவதால் இலங்கையின் இராஜதந்திர நகர்வுகள் முடங்கிப் போகும் அபாயம் இருப்பதாகவும் வெளிவிவகாரத்துறையினரும் கொள்கை வகுப்பாளர்களும் அச்சமடைந்துள்ளனர்.

# மங்கள சமரவீர ஜப்பான் பயணம்



கொழும்பு —

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வரும் வியாழக்கிழமை ஜப்பான் செல்லவுள்ளார்.

அத்துடன் அமைச்சரும் ஜெனீவாப் பேச்சுக்குழு உறுப்பினருமான ரோகித போகொல்லாகம எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜப்பான் செல்கிறார்.

ஜப்பானில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள நிலையில் அமைச்சர்கள் ஜப்பானுக்கு செல்வது குறிப்பிடத்தக்கது.

# கண்காணிப்பு குழுத் தலைவருடன் 57 உறுப்பினர்கள் இன்று சந்திப்பு



கொழும்பு —

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சனுடன் கண்காணிப்புக் குழுவின் 57 உறுப்பினர்களும் கொழும்பில் இன்று சந்தித்துப் பேசவுள்ளனர்.

கடற்பிராந்திய கண்காணிப்புத் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் பௌல் ப்ஜெர்க் தெரிவித்தார்.

உல்ப் ஹென்றிக்சனுடனான ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின்னர் கண்காணிப்புப் பணிகளில் புதிய உத்திகள் கடைபிடிக்கப்படும் என்றும், கடற்கண்காணிப்பு மீள மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

கண்காணிப்புக்குழுவினரது எண்ணிக்கையை 75 ஆக உயர்த்துவது குறித்து நோர்வே அனுசரணையாளர்களிடம் பரிந்துரைத்துள்ளோம் என்றும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெறும் இந்தக் கூட்டத்தில் 9 கடற் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட 57 பேரும் பங்கேற்கவுள்ளனர்.

# வடக்கு - கிழக்கில் தேர்தல்; இன்று ஆலோசனை கூட்டம்

கொழும்பு —

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை வடக்கு - கிழக்கில் நடத்துவது குறித்து விவாதிக்க தேர்தல் திணைக்களம் இன்று ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவுள்ளது.

வடக்கு - கிழக்கில் தேர்தல் ஒத்தி வைக்கப்படக்கூடும் என்ற செய்திகள் வெளியான நிலையில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் தெரிவத்தாட்சி அதிகாரிகள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாக பிரதி தேர்தல் ஆணையாளர் பி.எம்.சிறீவர்த்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் தேர்தல் நடத்த ஏதுவான சூழ்நிலை இருப்பதாக அந்த மாவட்டங்களின் தேர்தல் ஆணையாளர்கள் டி.கிசானந்தலிங்கம் மற்றும் டி.எம்.எல்.டி.தென்னக்கோன் ஆகியோர் தெரிவித்தனர்.

எனினும் இன்று நடைபெறும் கூட்டத்தில் இது தொடர்பாக இறுதி முடிவு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் லொறி கடத்தப்பட்டது!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கிமுனையில் லொறி ஒன்று கடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை வாகரையிலிருந்து ஓட்டமாவடி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது ஓட்டமாவடி பாலம் அருகில் இந்த லொறி துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது.

மே மாதம் முதல் வாரத்திலும் அடையாளம் தெரியாத நபர்களால் வாகரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறி ஒன்று கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ வைத்தியசாலை ஊழியரே தற்கொலைதாரியை கூட்டிவந்தாராம்!

கொழும்பு —

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவை கொல்ல முயன்ற பெண் தற்கொலைக் குண்டுதாரி நீண்ட நேரம் காத்திருந்தமைக்கு இராணுவ வைத்தியசாலை ஊழியர் ஒருவரே காரணமென தகவல்கள் கிடைத்துள்ளதாக இரகசிய பொலிஸ் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் வைத்தியர்களைச் சந்திக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவரால் தற்கொலைக் குண்டுதாரி ஐந்து தடவைகளுக்கு மேல் வைத்திய ஆலோசனைகளுக்காக இராணுவ வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டமை தெரியவந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்த விபரம் கண்டுபிடிக்கப்பட்டாலும் இந்த ஊழியரும் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்ததால் மேலதிக விசாரணைகளை நடத்துவதில் தாம் பாரிய சிக்கலை எதிர்நோக்குவதாகவும் இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.

(தே)

# ரோக்கியோவில் 30 ஆம் திகதி இணைத்தலைமை நாடுகள் கூட்டம்

கொழும்பு —

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் மிக முக்கியமான கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ரோக்கியோவில் நடைபெறவுள்ளது.

ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், பிரிட்டன் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் இந்தியாவுக்கும் அழைப்பு விடப்படவுள்ளதுடன் கனடாவையும் அழைப்பது குறித்து ஆலோசனை நடத்தப்படுகிறது.

இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் மீண்டும் சமாதான பேச்சுக்களை தொடர்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

# கதிர்காமம் சென்ற 13 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது!

கொழும்பு —

கதிர்காமத்துக்கு சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த வேளை விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அம்பாந்தோட்டையில் 13 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், உரிய அடையாள ஆவ ணங்களை வைத்திருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுக்கு சிங்களம் தெரியாததால் அவர்களிடம் பொலிஸாரால் விசாரணை நடத்த முடியவில்லை என்றும் கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு -

கே.நகுலேஸ்வரன் (கோப்பாய்), சின்னத்தம்பி சுஜாதன் (கோப்பாய்), சில்வெஸ்ரர் அன்ரனிராஜ் (இளவாலை), கிரிதாசன் ராஜா (இளவாலை), எஸ்.ஜீவாகரன் (இளவாலை), அருள்நாயகம் குணராஜ் (இளவாலை), சின்னராசா கிரிதரன் (யாழ்ப்பாணம்), ஜீவரட்ணம் சுரேஸ் (யாழ்ப்பாணம்), சிவலோகம் சுதாகரன் (சுன்னாகம்), கனகராசா மதன் (சுன்னாகம்), யோகராஜா சுரேஷ் (சுன்னாகம்), சுப்பிரமணியம் சுதாகரன் (நிலாவரை), செல்வரட்ணம் கிருபாகரன் (ஆனையிறவு). (தே)

# மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காணுமாறு கோரிக்கை

கொழும்பு —

மனித உரிமை மீறல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மனித உரிமை மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய மையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்தவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது -

இலங்கை சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவை முகம் கொடுக்கவேண்டும்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியை ஒப்புக்கொண்டிருப்பது கவலைக்குரியது.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்க ஏற்கனவே பல்வேறு மனித உரிமைகள் அமைப்பினர் அளித்திருந்த பரிந்துரைகளைத் தொகுத்து தங்களுக்கு அனுப்புகிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசத்தின் விடுதலையை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம்

## தளபதி அமிர்தாப்

கிளிநொச்சி—

எமது தேசத்தின் விடுதலையை வென்றெடுக்க வேண்டிய இறுதிச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும் என சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் கடற்புலி லெப்.கேணல் அன்புவின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுரையாற்றுகையில் தெரிவித்தார்.

இன்று இறுதிக்கட்ட யுத்தத்துக்குள் நாம் சென்றுவிட்டோம். கடந்த 4 வருட சமாதானத்தின் மூலம் நாம் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை. சமாதானம் என்றோ செத்துவிட்டது. எமது மக்கள் அன்று தொட்டு இன்றுவரை பல பேச்சுவார்த்தைகளைக் கண்டுள்ளனர். முன்னைய பேச்சுக்கள் போன்றுதான் இனிவருகின்ற பேச்சுக்களும் எமக்கு எதனையும் தரப்போவதில்லை. எமது தேசத்தின் விடுதலையை எமது பலத்தின் மூலம் தான் தீர்மானிக்க முடியும் என தளபதி அமிர்தாப் மேலும் குறிப்பிட்டார்.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடற்புலிகள் வழமையான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை கடற்படையினரின் வலிந்த தாக்குதலால் ஏற்பட்ட மோதலில் வீச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி லெப். கேணல் அன்புவின் (நாகேஸ்வரராஜா அமுதசுமணா, கொடுக்கிளாய், வடமராட்சி) இறுதி வணக்க நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. மக்களின் வணக்கத்துக்காக அவரது இல்லத்தில் லெப்.கேணல் அன்புவின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

தொடர்ந்து திருவுருவப்படம் பொதுமக்கள், போராளிகளின் அணிவகுப்புடன் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவுக்கல் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தளபதி அமிர்தாப், கடற்புலிகளின் மகளிர் பொறுப்பாளர் பூரணி, கடற்புலிகளைச் சேர்ந்த காதர் உட்பட பெருமளவு பொதுமக்களும், போராளிகளும் கலந்து கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் கேணல் கவியழகியின் நினைவுக்கல்லும் நேற்றுமுன்தினம் முழுமையான இராணுவ மரியாதைகளுடன் திரைநீக்கம் செய்யப்பட்டது.

விசுவமடு மூங்கிலாற்றில் அமைந்துள்ள லெப்டினன்ட் கேணல் கவியழகியின் இல்லத்தில் இருந்து திருவுருவப்படம் மட்டக்களப்பு, அம்பாறை மாவீரர் மண்டபத்துக்கு மக்கள் வணக்க நிகழ்வுக்காக எடுத்துவரப்பட்டது. மட்டக்களப்பு, அம்பாறை மாவீரர் பணிமனை பொறுப்பாளர் ராயு தலைமையில் நடைபெற்ற வணக்க நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றினார்.

கவியழகியின் திருவுருவப்படத்துக்கு அவரது தாயார், சகோதரர்கள் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுரைகளை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் உமைநேசன், கடற்புலி போராளி எழிலன், கடற்புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் மோகன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

மக்களின் மலர்வணக்கத்தைத் தொடர்ந்து திருவுருவப்படம் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது.

அதேபோன்று கடற்புலி மேஜர் மலர்நிலவனின் வீர வணக்க நிகழ்வு நடைபெற்றது. ஜெயபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் முழங்காவில் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான அச்சுதன் ஏற்றிவைக்க, திருவுருவப்படத்துக்கான சுடரை அவரது பெற்றோர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

வீரவணக்க உரையை வடமராட்சி கோட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், மன்னார் கோட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அமுதன், ஜெயபுரம் பாடசாலை ஆசிரியர், முழங்காவில் பிரதேச இளைஞர் பேரவைத் தலைவர் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து முழங்காவில் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரை நீக்கம் செய்யப்பட்டது.

# அமினோ பீனோல் இயற்கை உரம் விரைவில் அறிமுகம்!

கிளிநொச்சி—

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து அமினோ பீனோல் இயற்கை உரத்தை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

கடந்த சில காலங்களாக இரசாயன உரப்பாவனைகளால் மண்வளம் பாதிக்கப்பட்டுள்ளதால், இழந்த மண்வளத்தை மேம்படுத்தி உற்பத்தியாளர்களை ஊக்குவித்து உயர்விளைவைப் பெறும் நோக்கோடும், இயற்கை உரப்பாவனையை ஊக்குவிப்பதற்காகவும் இந்த இயற்கை உர அறிமுகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, முள்ளியவளை, குமுழமுனை, துணுக்காய், பாண்டியன்குளம், மல்லாவி, ஒட்டுசுட்டான், ஒலுமடு பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இந்த உர வகைகள் வழங்கப்படவுள்ளன.

தமிழர் தாயகத்தின் கிராமிய அபிவிருத்திச்சேவைக்கென இயற்கை உரம் வழங்கப்படவிருப்பதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்தது.



வன்னேரிக்குளம் மாவீரர் படிப்பகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது வைத்திய கலாநிதி ச.முருகானந்தன் மலர்மாலை அணிவித்து மதிப்பளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். படம் - கு.கிருஷ்ணா.

# பற்சிகிச்சை

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகளின் பற்சுகாதாரப் பிரிவு, கடந்த 9ஆம் திகதி வேரவில் அரசினர் வைத்திய சாலையில் பற்சிகிச்சையை மேற் கொண்டது. இதில் பற்சுகாதார குறைபாடுள்ள 60 பேருக்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன் விழிப்பு ணர்வுக் கருத்தூட்டல்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் அதேதினம் வன்னேரிக்குளம் அரசினர் வைத்தியசாலையிலும் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதில் பற்சுகாதார குறைபாடுள்ள 65 இற்கு மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

# தமிழீழ சுகாதார நடைமுறை சட்டம்

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார நடைமுறைச் சட்டம் தமிழீழத்தில் சுகாதாரத்தைப் பேணுவதையும், அதனை மேம்படுத்துவதையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதையும் அதனை மீறுவோர் மீது நடவடிக்கையை எடுப்பதற்குமாக உருவாக்கப்பட்டுத் தமிழீழ தேசியத் தலைவரின் ஒப்புதலுடன் 2006 ஆம் ஆண்டின் 03 ஆம் எண் சட்டமாகத் தமிழீழச் சட்டவாக்கச் செயலகத்தால் வெளியிடப்படுகிறது. இந்தச் சட்டத்தின் -

இயல் 01 - பொதுவிளக்கங்களையும் இயல் - 02,03,04, 05,06, 07 தமிழீழப்பகுதியில் தனியார் மருத்துவமனை, ஆங்கில மருந்து விற்பனை நிலையம், வெதுப்பகம், பல்பொருள் வாணிபம், அரைக்கும் ஆலை, உணவகம், தேனீர்ச்சாலை, குளிர்பான நிலையம் என்பவற்றை நடத்துவதற்குக் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை ஒழுங்குகளையும், அவற்றை மீறி நடப்போருக்கான ஒறுப்புக்களையும் -

இயல் - 08, - இயல் 02,03, 04,05,06,07 என்பவற்றுக்கான உணவு, மருந்து ஆய்வாளர் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைகளையும் மற்றும் பொதுவான ஏற்பாடுகளையும் கொண்டமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமகால அரசியல் கருத்தரங்குகள்!

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில்நடைபெற்ற நிகழ்வில் கருத்துரைகளை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், தூயவன் அரசறிவியற் கல்லூரி விரிவுரையாளர் புலிமறவன், நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் தயானந்தா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்தநிகழ்வில் புதுக்குடியிருப்பு உடையார் கட்டு பிரதேசத்துக்கு உட்பட்ட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும், கலந்து கொண்டனர்.

✶கிளிநொச்சி, கந்த புரம் முதலாம் பாடசாலையில் அக்கராயன் பிரதேசத்துக்கு உட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களுக்குமான சமகால அரசியல் கருத்தரங்கும், புதிய வர்த்தகசங்க உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது.

தொடர்ந்து வர்த்தக சங்க தலைவர் ரவி த்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமகால அரசியற்கருத்துரைகளை அக்கராயன் பிரதேச காவற்றுறைப் பொறுப்பாளர், அரசியற்றுறைப் பொறுப்பாளர் ஊரக மேம்பாட்டு பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

✶முல்லைத்தீவு உடையார்கட்டு மூங்கிலாறு பிரதேசத்தில் சமகாலக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் பி.ப 3.30 மணிக்கு மூங்கிலாறு தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சண் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் யூட், மட்டக்களப்பு, அம்பாறை மாவீரர் மண்டப பொறுப்பாளர் ராயு, கொள்கை முன்னெடுப்புப்பிரிவைச் சேர்ந்த வண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். இதில் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

# கலந்துரையாடல்

நெடுந்தீவு

நெடுங்கேணிப்பிரதேச உழவு இயந்திர உரிமையாளர்களை நேற்று முன்தினம் முல்லைத்தீவு - மணலாறு மாவட்ட கட்டளைத்தளபதி குமரன் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் மு.ப 10.00 மணிக்கு நெடுங்கேணி பிரதேச அரசியல் துறை செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்புரையை தளபதி குமரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நெடுங்கேணி பிரதேசத்துக்குட்பட்ட உழவு இயத்திர உரிமையாளர் சங்கம் தெரிவுசெய்யப்பட்டது.

# இரவுநேர சுற்றுக்காவல்

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி பிரதேச அரசியற்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் வட்டக்கச்சி - இராமநாதபுரம் பகுதி பிரதேச மக்களால் முக்கிய சந்திகளில் இரவுநேர விழிப்புக்குழுவும், சுற்றுக்காவலும் மேற்கொள்ளப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (09)

# எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க வாகனங்களை பதிய கோரிக்கை

கிளிநொச்சி—

தற்போது ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடியை இலகுபடுத்துவதற்காக வாகனங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர்.

கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் என்பவற்றை இன்று காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பயன்பாட்டிலும் அந்த நிறுவனப் பணியாளர்களின் பயன்பாட்டிலும் உள்ள வாகனங்களை கரைச்சி வடக்கு ப.நோ.கூ சங்கத்திலும், மக்களின் பாவனையில் உள்ள வாகனங்களை கரைச்சி தெற்கு பல. நோ.கூ.சங்கத்திலும், ஏனைய நிறுவனங்களின் பாவனையில் உள்ள ஒட்டோ, மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை வடபிராந்திய பாரவூர்தி சங்கத்திலும் பதிவை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# முன்னாள் போராளிகளுக்கான சமகால நிலை குறித்து விளக்கம்

வட்டக்கச்சி—

சமகால அரசியல் தொடர்பாக போராட்ட காலத்தில் போராளியாக இருந்து விலகியவர்களுக்கான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு வட்டக்கச்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன் தலைமையில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் போராளியாக இருந்து விலகி தற்போதைய சூழ்நிலை காரணமாக மீண்டும் போராளியாக இணைந்துள்ள சுரேஸ், தூயவன், அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த பாபு ஆகியோர் போராட்டத்தின் தற்போதைய நிலை பற்றி எடுத்துக் கூறினர்.

இந்தச் சந்திப்பில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (09)

# பள்ளி சேமிப்பு கிளை இன்று திறப்பு!

வட்டக்கச்சி—

பாடசாலை மாணவரிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழீழ வைப்பகத்தால், செயற்படுத்தப்பட்டு வரும் பள்ளி சேமிப்புக் கிளை இன்று காலை 10 மணியளவில் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப் படவுள்ளது. (09)

# பயிற்சி நெறி ஆரம்பம்!

புதுக்குடியிருப்பு—

முல்லைத்தீவு வலயப் பணிமனையின் முறைசாராக் கல்விப்பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சாரதிப் பயிற்சி நெறி இன்று பிற்பகல் 2.30 மணியளவில் புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த அனைவரையும் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றில் தீவக படுகொலைகள் குறித்து முறையீடு

யாழ்ப்பாணம் —

தீவகத்தில் கடற்படையினரின் வெறியாட்டக் கொலைகள் குறித்து சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

கடற்படையின் முற்றுகையில் இருக்கும் தீவகத்தில் முற்றுமுழுதாக மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை காணப்படுவதாக யாழ்ப்பாண மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கடற்படையினரால் படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட இடங்களுக்கு நீதிபதி சென்றபோது பொலிஸார் தடயங்களைப் பதிவுசெய்ய நீண்ட நேரத்தின் பின்னரே வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு மக்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் துணையுடன் செய்யப்பட்டுள்ள இந்தப் படுகொலைகளை உடனடியாக றோமா சர்வதேச போர்க் குற்றவியல் சட்டத்துக்கமைய சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றத்தில் முறையிட ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

1948 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இனப்படுகொலைக்கு எதிரான சர்வதேச சட்டம் - 1974 இல் கொண்டுவரப்பட்ட சித்திரவதைகளுக்கு எதிரான சட்டம் - 1998 இல் கொண்டுவரப்பட்ட றோமா போர்க் குற்றவியல் சட்டங்களுக்கமைய அரசின் துணையுடன் நடத்தப்படும் உள்ளூரில் நீதி கிடைக்கப்பெறாத குற்றங்களைச் சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றத்தில் தனிநபரும் முறைப்பாடு செய்யலாம்.

அதற்கமைய தற்போதைய படுகொலைகளையாவது போர்க்குற்றவியல் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# வடமராட்சி கடற்பகுதியில் மீன்பிடிக்க தடைவிதிப்பு

வடமராட்சி —

வெற்றிலைக்கேணி கடற்சமரைத் தொடர்ந்து வடமராட்சி கடற்பிரதேசத்தில் மீன்பிடித் தடையை இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை தொடக்கம் கற்கோவளம் வரை கடந்த வியாழக்கிழமை முதல் இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தடையால் 19 கடலோரக் கிராமங்களைச் சேர்ந்த 7 ஆயிரம் மீனவர் குடும்பங்கள் நாளாந்த வாழ்வுக்கு துன்பப்பட்டு வருகின்றனர்.

புதிய உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை மீன்பிடித் தடை அமுலில் இருக்கும் என்றும் மீனவர்கள் கடலிலிருந்து படகுகளை எடுத்துச் சென்று விட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழில் மொத்தம் 16 ஆயிரத்து 799 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 209 மீனவர்கள் இருப்பதாகவும், யாழ். மக்கள் தொகையில் 12 வீதத்தினர் இது என்றும் மீனவர் சமாசத்தின் தகவல்கள் தெரிவித்தன.

# மீண்டும் இடம்பெயர்ந்து வரும் மணற்காடு கரையோர மக்கள்

வடமராட்சி —

வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்கரையோரப் பிரதேசங்களில் மீள் குடியேறிய மக்கள் மீண்டும் குடத்தனை இடைத்தங்கல் முகாம்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு மணற்காடு கரையோரத்தில் மீள்குடியேற்றத் திட்டத்தில் குடியேறிய மக்கள் அண்மையில் வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்பரப்பில் ஏற்பட்ட அசம்பாவிதங்களையடுத்து இராணுவ கெடுபிடிகள் அதிகரித்ததைத் தொடர்ந்து மீண்டும் குடத்தனை இடைத்தங்கல் முகாம்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் மணற்காடு கரையோரப் பிரதேசங்களில் இராணுவ நெருக்கடிகளால் மீனவர்கள் கடற்தொழிலுக்கும் செல்வதில்லை. பெரும்பாலும் கடற்தொழிலை நம்பியே வாழ்ந்து வரும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் கடற்தொழிலுக்குச் செல்வதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம் —

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என்ற வகையில் பன்னிரண்டு மாதமும் பன்னிரு திருமுறையையும் முற்றோதி வருகிறது.

இதன்படி நேற்றுமுதல் ஜூன் 15 ஆம்திகதி வரை யாழ்ப்பாணம் நீராவியடி சிவகுருநாதன் வீதி தோப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் தினமும் மாலை 5 மணிக்கு ஆலய பூசையைத் தொடர்ந்து முற்றோதல் நடைபெறும்.

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம் —

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 தொடக்கம் 45 வயதுக்கிடைப்பட்ட க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஐந்து பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர்நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 4 ஆவது மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

# அலங்கார உற்சவம்

வடமராட்சி —

பருத்தித்துறை தும்பளை இலட்சுமணன் தோட்ட ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 27 நாட்கள் நடைபெறவுள்ள இந்த திருவிழாவில் அடுத்தமாதம் 7 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 8 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

# எரிபொருள் தட்டுப்பாடு விவசாயிகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போதிய மண்ணெண்ணெய் இல்லாமையால் விவசாயிகள் தமது நீரிறைக்கும் இயந்திரங்களுக்கான மண்ணெண்ணெயைப் பெறமுடியாதுள்ளதாகவும் இதனால் பயிர்களுக்கான நீர்ப்பாசனம் தடைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில தனியார் விற்பனை நிலையங்களில் 1 லீற்றர் மண்ணெண்ணெய் 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

எனவே விவசாய சம்மேளனங்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு மண்ணெண்ணெயைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : நி.டனுசிகன்
முகவரி : பரந்தன்.



வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
குப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# பராமரிப்பு வேலைகள் காரணமாக மின்சாரம் தடைப்படுமென அறிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யப்படவுள்ளதால் பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப்படவுள்ளதாக மின்சாரசபை தெரிவித்துள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்படவுள்ளதாகவும் குறித்த வேலைகள் முன்னரே முடிவடைந்தால் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாக மின்சாரம் வழங்கப்படும் எனவும் இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச அலுவலக மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சுங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களில் எதிர்வரும் 29 அம் திகதியும் - உரும்பிராய், கோண்டாவில் பட்டணம் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப்பகுதி எதிர்வரும் 27 ஆம் திகதியும் -

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஜூன் 3 ஆம் திகதியும் -

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாண பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவபீட பிரதேசம், பொற்பதி, சங்குவேலிப் பகுதிகளில் ஜூன் 10 ஆம் திகதியும் -

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சி பிரதேசம் ஜூன் 17 ஆம் திகதியும் -

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பளை, பன்னாலைப் பகுதிகளில் ஜூன் 17 ஆம் திகதியும் -

குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர் பாதுகாப்பு வலய பகுதிகளில் ஜூலை 7 ஆம் திகதிகளிலும் மின்சாரம் தடைப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு


சாவகச்சேரி —

சாவகச்சேரி நகரசபையால் நகரப் பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகரப் பகுதியிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் வீதி களில் அலைந்து திரியும் நாய்கள் இவ்வாறு நகரசபையால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன.

நகரசபையின் இந்த நடவடிக்கை காரணமாக தற்பொழுது நகரப் பகுதியில் தெருநாய்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன.





அண்மையில் இடம்பெற்ற மட்டுவில் வடக்கு கண்ணகை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும், சிறார்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம். (24)

# மானிப்பாய் நகர சபை உருவாக்கல் ஆவணங்கள் அனுப்பி வைப்பு

மானிப்பாய் —

மானிப்பாய் நகரசபையை உருவாக்குவதற்கான ஆவணங்கள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பிரதேசசபை செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசம் நான்கு உப அலுவலகங்களைக் கொண்டது. இங்கு மானிப்பாய் பட்டணத்தையும், ஆனைக்கோட்டை கிராம உப அலுவலகத்தையும் ஒன்றாக இணைத்த வகையில் மானிப்பாய் நகரசபையாக தரமுயர்த்த சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்குரிய ஆவணங்கள், வரைபடங்கள் என்பன உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏனைய இரண்டு உப அலுவலகங்களான - பண்டத்தரிப்பு பட்டண சபையையும், மாதகல் கிராம உப அலுவலகத்தையும் இணைத்து பண்டத்தரிப்பு பிரதேச சபையை உருவாக்கவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் மானிப்பாய், நல்லூர், நீர்வேலி ஆகிய மூன்று பிரதேச சபைகளை நகர சபையாக 2002 ஆம் ஆண்டிலிருந்து தரம் உயர்த்தப்படுமென அறிவித்து மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் 6 பிரதேச சபைகள் நகர சபைகளாக தரமுயர்த்தப்படுமென யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரச அதிபர் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் இதற்குரிய ஆவணங்களை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக கோரியிருந்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



புலிகளின் குரல் வானொலியின் 'அரசியல் அரங்கம்' நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை

'வெற்றிலைக்கேணி கடற் பரப்பில் கடற்புலிகளின் தாக்குதலில் சிக்கி இரு டோராப் படகுகள் மூழ்கடிப்பு' என்ற பின்னணியோடு உங்களுடன் பேசுகிறேன்.

பெரும் கடற் சமர் ஒன்று நடந்து முடிந்து விட்டது. இந்தச் சமருக்கு மக்களும் எழுப்ப வேண்டிய நிலைக்கு வந்துள்ளோம்.

போர் நிறுத்தம் என்பது முழுமையாக தீர்வை நோக்கிய முதலாவது படி என்பதை கண்காணிப்புக் குழுவின் தலைவர் அறிந்திருக்க மாட்டாரா?

போர் நிறுத்தத்தை மட்டும் வைத்துக் கொண்டு சமாதான காலத்தை நீண்டகாலம் இழுத்தடிக்கலாம் என்று யாராவது

வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி வேலவன் தெரிவித்த கருத்தை எதிரொலிக்க விரும்புகிறோம்.

"நான்காம் கட்ட ஈழப் போர் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன். இறுதியாக நடைபெற்ற ஜெனிவா பேச்சுக் களுடன் அது அரசாங்கத்தால் தொடங்கப்பட்டு விட்டது என்று நினைக்கிறேன். அதை உணர்ந்து வாதத்தால் அபகரிக்கப்பட்டுள்ளது. ஆகையால் எமது கடற்பரப்பு குறித்து நாம் மிகவும் விழிப்பாக இருப்போம்.

இலங்கையில் மொத்த கடற் பரப்பில் 60 வீதம் - அதாவது ஆயிரம் கிலோ மீற்றர் நீளக் கடற் கரை யானது எங்களிடையே உள் ளது. அதைப் பாதுகாப்பதற்காக நாங்கள் மேற் கொள்கிற நடவடிக் கையை எவரும் தடுத்துவிட முடியாது.

கடலோடு எங்கள் வாழ்வு தொடர் புடையது. தமிழீழ கடற்பரப்பு என்பது மிகப் பெரிய அற்புதமான வளங்களைக் கொண்டது. அதனது வரலாற்று முக்கியத்துவத்தை பல ஆய்வுகள் தெளிவாகச் சொல்லி இருக்கின்றன.

இலங்கைத் தீவிலேயே மன்னாரும், முல்லைத்தீவும்தான் மிகத் தரமான மீன்பிடி மையங் களாக உள்ளன. மிக அற்புதமான வளங்களைக் கொண்ட கடல் நீரேரி கள் கொக்கிளாய், நாயாறு என்பவை.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை வைத்துக் கொண்டு மட்டுமே இங்கே காலம் தள்ளிவிட முடியாது என்பதைத்தான் தளபதி வேலவனின் கருத்துக்கூடாக நாம் வலியுறுத்தினோம்.

உலகத்தில் எரிபொருள் அருகி வரும் இந்தக் காலத்தில் புதிய வளங் கள் குறித்து உலகம் மிகவும் கவன மெடுக்கிறது.

தமிழ் நாட்டில் காவிரி வடிநிலத் தின் தொடர்ச்சியாக எங்கள் பகுதி களில் பெற்றோலிய படிவுகள் இருப் பது குறித்த ஆய்வுகள் நடைபெறக் கூடிய காலம் உருவாகி உள்ளது. ஆய்வுகள் தொடங்கப்பட்டு விட்டன.

வங்காள விரிகுடாவுக்கு கிழக்குக் கரையோரமாக காவிரி வடிநிலமானது பாக்கு நீரிணை யுடன் இணைந்ததாக நீள்கிறது. இதனது 65 வீதம் தமிழ் நாட்டில் இருந்தாலும் கூட, 35 வீத பெற்றோலியப் படிவுகள் உள்ள பகுதியாக தமிழீழப் பகுதிகள்

# கடலும் தமிழர்களின் தாயகமே என்பதை உறுதிப்படுத்தவே வெற்றிலைக் கேணி ஒத்திகை

ஊடாக மிகப் பெரும் அரசியல் செய்திகளையும், இராணுவச் செய்திகளையும் இராஜதந்திர செய்திகளையும் புலிகள் அனுப்பிக் கொண்டே இருக்கின்றனர்.

4 ஆண்டுகால சமாதான காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை எல்லா வழிகளிலும் முடக்க நினைத்த முயற்சிகளை புலி கள் முறியடித்துவிட்டனர் என்பது தான் இதனது மையமான செய்தி.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் சுதந்திரமாக இயங்க முடியா விட்டால் - பயணம் செய்ய முடியாவிட்டால் யாருமே இயங்க முடியாது, பயணம் செய்ய முடியாது என்ற இராணுவச் சமநிலையை புலிகள் மிகத் தீவிரமாக வெளிப் படுத்தியுள்ளனர்.

நீண்ட காலத்துக்குப் புலிகளைச் சீண்டி சமாதான விளையாட்டுக் களை விளையாடலாம் என்று நினைத்திருந்தால் - அவர்களது எண்ணங்கள் யாவும் மண்ணாகிப் போவது இப்போது கண்கூடாக இருக்கிறது. புலிகளை எப்போதும் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதும், புலிகளை எப்போதும் சோதிக்கக் கூடாது என்பதும் வரலாற்றின் இயங்கு பொருள். இதைச் சிங்களம் உணர்ந்து கொள்ளவும், திருந்துவதற்கும் மீண்டும் ஒரு வாய்ப்பை புலிகள் அளித்திருக்கிறார்கள்.

வெற்றிலைக்கேணி கடற் பரப்பில் நிச்சயமாக சிங்களம் பாரிய ஒரு இழப்பைச் சந்தித்து இருக்க முடியும். அப்படி இருந்தும் கூட, எங்கள் பெருந்தலைவர் பெருந்தன்மையோடு சிங்களம் திருந்துவதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்.

இந்த நிலையில் -

'கடற்படையினரை ஆத்திர மூட்டும் வகையில் கடலில் விடுதலைப் புலிகள் நடமாடுவது யுத்த நிறுத்த மீறலாகும். இலங் கையைச் சுற்றிய கடற்பிரதேச மானது அரச கட்டுப்பாட்டில் உள்ளதாகும். சர்வதேச சட்ட விதிகளின் படி - போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின்தலை வரால் இது ஏற்பட்டுள்ளது. அரச சார்பற்றோர் எவரும் கடல் மற்றும் வான் வழிகளைப் பயன்படுத்த முடியாது. விடுதலைப் புலிகளுக்கு உரிமை இல்லை.'

என்று மிகத் தீர்க்கமாக ஏதோ ஒரு விசாரணையின் முடிவில் கூறுவது போல் எந்த விதமான பொறுமையுமின்றி, ஆலோசனையு மின்றி கண்காணிப்புக்குழு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அமைதிப் பேச்சு என்பது போர் நிறுத்தம் மட்டுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளதுதான் தமிழ் மக்களுக்கான ஒட்டுமொத்த தீர்வா?

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் போர் நிறுத்தக் கடதாசியிலே அனைத்து தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளதா?

என்ற கேள்விகளை எமது நினைத்தால், அது முட்டாள் தனமானது. இந்த மாயையிலிருந்து கண்காணிப்புக் குழுத் தலைவர் விடுபட வேண்டும்.

போர் நிறுத்த உடன்பாட்டில் - எமது தாயகம் பற்றி உள்ளதா? எமது



மக்க ளினது துன்பங்கள் பற்றி உள்ளதா? அவை இருந்தால் கூட அவை நிறைவேற்றப்பட்டுள்ளதா? எங்கள் மக்களினது இயல்பு நிலைக்கு ஏற்ற வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது எவரும் தடையாக இருக்கக் கூடாது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையானது தமிழ் மக்களினது வாழ்நிலைக்கு எதிராகச் சொல்லப்பட்ட அறிக்கையாகும்.

இந்தப் போர் நிறுத்த உடன்பாடானது தமிழரது தாயகத் தில் - கடலிலும், நிலத்திலும் புலிகள் பெற்றுள்ள பலத்தின் அடிப்படையில் தான் செய்யப் பட்டது.

தரையில் தங்களது நிலை களைப் புலிகள் வைத்திருப்பது போலவே, கடலிலே வைத்திருப் பதை எவராலும் தடுக்க முடியாது. இது கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு வராமல் இருந்திருக்கலாம்.

போர் நிறுத்த உடன்பாட்டில் இது சொல்லப்படாமல் இருந்தாலும் கூட, சமநிலைச் சமன்பாட்டில் இவை அடங்கும் என்பதைத்தான் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் 2003 ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார்.

அவர் கூறியதை சிங்களம் அன்று ஏற்க மறுத்தது.

கடலிலே புலிகளின் சமநிலையை ஏற்றுக்கொள்ளா விட்டால் அது பாரிய மோதல் களுக்கு வழிவகுக்கும். பாரிய நாசத்தை விளைவிக்கும் என்று அவர் கூறியிருந்தார். அதை அன்று சிங்களம் சரியாகப் புரிந்து கொள்ளா மல் நோர்வேக்கு அழுத்தம் கொடுத்து பதவி மாற்றியது. அன்று அவர் அஞ்சியது போலவே கடலிலே பாரிய சமர் ஒன்று வெடித்து, சமரானது மற்றொரு போருக்கான முன்னோடி நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

கொள்ளாமல் சமாதானம் பற்றிய மாயையில் எவரும் வாழ முடியாது. அவ்வாறு வாழ வைத்திருப்பதற்கு உலகில் எவரும் முயற்சிக்கக் கூடாது. நாம் எமது கடந்தகால அனுபவங்களைக் கொண்டு போர் ஒன்று தொடங்கிவிட்டது என்ற செய்திக்காக காத்திருக்கிறோம்.

ஆனால் தற்போதைய கள யதார்த்தம் அவ்வாறு இல்லை. ஒரு யுத்தமானது பெரும் சமருடன் தான் தொடங்க வேண்டும் என்ற விதிகளும் இல்லை. என்னைப் பொறுத்தவரை யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்பது ஈழப் போர் முடியும் வரை அப்படியே தான் இருக்கப் போகிறது. அந்த ஒப்பந்தம் இருக்கும் போதே தாக்குதல் நடக்கும். சமர்கள் நடக்கும். இது தான் நான்காம் கட்ட ஈழப் போர்" என்று அவர் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தை கண் காணிப் புக் குழுவின் கவனத்துக்கு சமர்ப் பிக்க விரும்புகிறோம்.

கள யதார்த்தம் என்பது எல்லா வற்றையும் விட மிக முக்கிய மானது.

"கடலும் எங்கள் தாயகமே" என்ற நிலைப்பாட்டை மிக நீண்ட காலத்துக்கு முன்னரே நமது விடுதலை இயக்கம் எடுத்தமை தான் அதி சிறப்பான, மிக முக்கிய மானது.

இந்த உலகம் தொடக்கத்தில் நிலமாகத்தான் இருந்தது. இன்று உலகில் 71 வீதம் கடற்பரப்பாக இருக்கிறது.

"கடலும் எங்கள் தாயகம்" என்ற விடுதலைப் புலிகளின் புவியியல் ரீதியான பொருத்தமான நிலைப் பாட்டை உலகம் உணர வேண்டும்.

எமது வாழ்வும், இருப்பும் கட லோடு தொடர்புடையது. ஆகை யால் கடல் எங்கள் தாயகம் என்ற நிலைப்பாட்டை நாங்கள் ஒரு போதும் விட்டுக் கொடுக்க முடியாது.

எங்களுடைய நிலப்பரப்பின் 8 ஆயிரம் சதுரகிலோ மீற்றர் பரப்பள வானது சிங்களத்தின் குடியேற்ற

ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீற்றர் கடற்கரையில் மொத்த கடல் நீரேரியில் 65 வீதம் எமக்குரியது.

கண்டல் காடு 64 வீதம் எமக்குரி யது.

உவர் சதுப்பு நிலங்களில் 81 வீதம் எமக்குரியது.

மணற்திட்டுக்களில் 60 வீதம் எமக்குரியது.

காடுகளில் 24 வீதம் எமக்குரியது.

இந்த நிலையில் கடல் என்பது தமிழர் தாயகத்தின் மிக முக்கிய மான உயிர் மையமாக இருக்கிறது.

ஆகையால்தான், இதனை உறுதிப்படுத்த ஒரு ஒத்திகையை கடலில் நடத்திக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மிக நீண்டகாலமாக எமது மீனவப் பெருமக்கள் படுகின்ற துன் பங்கள் அளவற்றது.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னால் பாதுகாப்பு வலயம் என் பதைக் கணக்கிட்டுப் பார்ப்போமே யானால் -

ஏறத்தாழ 4 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் முற்றாகத் தொழில் இழந்து விட்டன.

45 இற்கும் மேற்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் இராணுவ ஆக்கிர மிப்பில் உள்ளன.

வலிகாமம் வடக்கில் சேந்தாங் குளத்தில் இருந்து தொண்டமனாறு வரையில் உள்ள அனைத்து மீன்பிடித் துறைமுகங்களும் முற்றாக செயலிழந்துவிட் டன. இதனால் மக்கள்



மீன் பிடிக்க முடியாத நிலை உள்ளது. ஆதலால் இதை இராணுவ ரீதியாக மட்டுமே சிந்திக்க முடியாது.

மனிதநேயத்துடனும் புலிகள் செயற்பட வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகையால், கடலிலே அரச சார்பற்ற எவரும் பயணிக்க முடியாது என்னும் போது, எங்கள் மக்கள் எந்த அரசைச் சார்ந்தவர்கள் என்ற கேள்வி எழுகிறது.

எங்கள் மக்கள் என்ன அநாதைகளா? பிறநாட்டவர்களா? அவர்கள் எங்கே வாழ்வது என்ற கேள்விக்கு கண்காணிப்புக் குழு பதில் சொல்ல முடியுமா?

உள்ளன.

இப்போது இந்த எண்ணெய் வள ஆய்வுக்காக உலகம் முழுவதும் ஆதரவைத் தேடி அலைகிறது சிங்களம். இதிலும் கூட இந்தியா, சீனா, நோர்வே என்று போட்டிகள் நடைபெறுகின்றன.

ஐ.நாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 200 மைல் கடல் பொருளாதார வலயம் என்பது ஏறத்தாழ 320 கிலோ மீற்றராகும். அந்தக் கடல் வலயம் கூட எங்கள் கட்டுப் பாட்டில்தான் இருக்க வேண்டும் என்பது எங்கள் நியதி. அதற்காகத் தான் எங்கள் விடுதலைப் போராட் டமே உருவானது.

எமது கடல் வளங்களை யார் பயன்படுத்துகிறார்கள் என்றால் அது கேள்விக்குறியாக உள்ளது.

அனைத்தையும் அடக்கிக் கொண்டு 4 ஆண்டு காலம் சமாதான காலத்தை கடைப்பிடித் தமைக்கு எங்களுக்குக் கிடைத்த பரிசு கடலிலே நீண்ட பயணம் செய்யக் கூடாது, முடியாது. உங்களுக்கு உரிமை இல்லை என்பதுதான்.

இந்த அறிவிப்புகள் எந்த வகையில் எங்கள் மக்களினது வாழ் நிலையைக் குறித்துச் சொல்வதாக இருக்க முடியும்?

ஆகையால் போர் நிறுத்தம் மிகப் பெரிய கேள்விக்குள்ளாகி யிருக்கக் கூடியதை அண்மையில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வெளியிட்ட அறிக்கைக்கூடாக பார்த்திருப்பீர்கள்.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்கு வரத் துக்கள், சுதந்திர மான நட மாட்டங் கள் சாத்தி யப்படும் வரை அரச படைகளி னது சுதந்திரமான நடமாட்டத்தை யும், போக்கு வரவுகளையும் அனு மதிக்க முடியாது" என்று தமிழ்ச் செல்வன் தெளிவாகக் கூறியுள்ளார்.

மேலும் அரசின் கடற்கலங்களில் கண்காணிப்புக் குழுவினர் பயணிக்க வேண்டும் என்ற தர்க் கரீதியான வேண்டுகோளையும் அவர் விடுத்திருக்கிறார்.

"கடல் எமது தாயகம்" என்ற கோட்பாடு முதன்மைப்படுத்தப்பட்டு, தமிழ்த் தேசிய இனச்சிக்கல் இப் போது கடலில் மையம் கொண்டுள்ளது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
கொடுத்தும் கொலல் வேண்டும் மன்ற அடுத்துஇருந்து
மாணாத செய்வான் பகை.
- திருக்குறள்.

## நமது நோக்கு

# தேசப்பற்றுச் சட்டம்

'தேசப்பற்று சட்டம்' என்ற பெயரில் நாட்டை யுத்தத்துக்குத் தயார்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

1985ஆம் ஆண்டின் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் ஒரு பிரிவாக - இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவிருக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம், கடல் வலய தடைச்சட்டம் ஆகியவற்றின் வரிசையில் தேசப் பற்று சட்டமும் தமிழ் மக்களை நசுக்குவதற்கானதொரு திட்டமாகவே இருக்கிறது.

யுத்தத்துக்காக அரசு தனது முழு வளங்களையும் பயன்படுத்தும் நோக்கிலும் - யுத்தத்துக்கு எதிரான சக்தி களை அடக்கி ஒடுக்குவதற்குமாகவே இந்தச் சட்டத் தைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின் றன.

முப்படைகளுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு மேற் கொண்ட முயற்சிகளில் அரசு தோல்வி கண்டுவிட்டது. இதனால் முஸ்லிம்களையும், மலையக இளைஞர்களை யும் தனித் தனிப் படைப்பிரிவாக சேர்க்க முயன்று அதிலும் தோல்வி கண்டது.

ஒருபுறம் படைகளை விட்டு ஓடுவோர் தொகை அதிக ரித்து வரும் நிலையில் - படைக்குச் சேரும் இளைஞர்களின் தொகை குறைவடைந்து வருகிறது. இதனால் தமிழ் மக்களுக்கு எதிரான முழு அளவிலான யுத்தத்தை நடத் தும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினை களை எதிர்கொள்கிறது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண 18 முதல் 50 வயதுக்குட்பட்டோரைக் கட்டாயமாக சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவு என்ற பெயரில் ஆயுதமேந்தவைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தென்பகுதிப் பாதுகாப்பை சிவில் பாதுகாப்பு படைப்பிரி விடம் ஒப்படைத்துவிட்டு - முப்படையினரின் முழு ஆளணி வளமும் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்குக் கொண்டு வரப்பட வுள்ளது.

அதைவிட 1995முதல் 2002 ஆம் ஆண்டு வரை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்து, ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மரணங்களுக்குக் காரணமாக இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தையை சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவுக்குப் பொறுப்பாக அரசு நியமித்துள்ளது.

இது தென்பகுதியில் வாழும் தமிழ் மக்களின் உயிருக் கும், உடைமைக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியதென்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஒருவகையில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்துக் காக - இலங்கை அரசு கட்டாய இராணுவசேவையை அமுல்படுத்தப்போகிறது. அதேவேளை அரசால் கொண்டு வந்து குவிக்கப்படும் முப்படைகளும் தீவிர யுத்தத்தில் ஈடுபடுவதானது ஒட்டுமொத்த தமிழின அழிப்புக்கே வித்திடும்.

இப்போதே நாளாந்தம் ஒன்றிரண்டாக ஆரம்பித்த கொலைகள் - ஒரே இரவில் 13 என்று உயருமளவுக்கு வேகம் பெற்றிருக்கிறது. இனந்தெரியாதோர் என்ற பெயரில் நடக்கும் இனப்படுகொலைகளையே கண்டும் காணாமல் இருக்கும் சர்வதேசம் - தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் யுத்தம்குறித்தா கரிசனை கொள்ளப் போகிறது?

கட்டாய ஆயுதப்பயிற்சி ஒருபுறம் இருக்க - பாதுகாப்புக் குறித்து ஏற்படும் செய்திகளை வெளியிடாமல் தடுப்ப தற்கு என்ற பெயரில் ஊடகங்களின் சுதந்திரங்களையும் கட்டுப்படுத்த தேசப்பற்று சட்டத்தின் மூலம் வழி காணப் படவுள்ளது.

இதன் மூலம் வடக்கு - கிழக்கில் எதிர்காலத்தில் யுத்தத்தின் பேரால் நடத்தப்படப்போகும் தமிழ்ப் படு கொலைகள் யாவும் மூடி மறைக்கப்பட்டு, புதைக்கப்படப் போகிறது.

ஜே.ஆர்,பிறேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா இவர்கள் வரிசையில் ஒரு மிக மோசமான இனப்படு கொலை நிகழ்த்திய ஜனாதிபதியாக பெயரெடுத்துவிட மகிந்த ராஜபக்ஷ விரும்புகிறாரோ தெரியவில்லை.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதன் பின்னர் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் மோசமான வெறியாட் டங்கள் வேகமாக அவை அதிகரித்துள்ளது கண் கூடு.

எதிர்காலத்தில் இது மிகத் தீவிரம் பெறும் என்றே தெரிகிறது. இதையெல்லாம் மூடி மறைக்கத்தான் தேசப்பற்றுச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.

தேசப்பற்றுச் சட்டம் என்ற போர்வையில் தமிழ் மக்களின் உரிமையும், உடமையும், உயிர்களும் புதைக்கப் படப்போகிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் நாட்டைக் காக்க நடவடிக்கை எடுப்பேன்!

## என்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



கொழும்பு —

விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத் தினால் நாட்டைப் பாது காக்க நடவடிக்கை எடுப் பேன் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித் துள்ளார்.

கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது -

நாட்டினது நிலைமை மிகப் பயங் கரமானதாக உள்ளதாகக் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இருந்த போதும் சமாதான முயற்சிகளில் நிச்ச யமற்ற தன்மை நிலவுகிறது. விடுத லைப் புலிகள் பேச்சுக்கு வருவது குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை. எங்களுக்குக் கிடைக்கும் சமிக்ஞைகள் வித்தி யாசப்படுகின்றன.

நாம் அமைதி முயற்சிகளில் ஈடுபாட்டுடன் உள்ளோம். நிலைமைகள் மோசமடைந்திருப்பதற்கு அவர்கள் தான் காரணம் என்பதை விடுதலைப் புலிகளும் உணர்ந்திருப் பார்கள். இந்த நாட்டு மக்களை அது பாதிக்கிறது.

கடந்த நவம்பரிலும் இத்தகைய நிலைமைகள் இருந்தன. இனப்பிரச்சினை தொடர்பான எனது செயற்பாடுகள் வெளிப் படையானவை. எந்தவித மறைமுகத் திட்டமோ, இரகசியத் திட்டமோ என்னிடம் இல்லை.

தென்பகுதி, வடக்கு அல்லது கிழக்கு மக்களுடன் திறந்த மனதுடனேயே உள்ளேன். மக்களால் எளிதில் அணு கக்கூடிய நபர் நான் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. மக்களது உணர் வுகளை நான் உணர்ந்தவன். அந்த வகையில் எனது வெற்றிக்கு விடு தலைப் புலிகள் உதவியிருந்திருந் தால் சரியாக இருக்கலாம். ஆனால் எதிர்காலத்திலும் இதே நம்பிக்கையை விடுதலைப் புலிகள் என்மீது வைத்தி ருக்க வேண்டும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் இன்ன மும் நடைமுறையில் உள் ளது. அரசாங்கம் அதனை மதித்து நடக்கிறது ஆனால் விடு தலைப் புலிகள் பல சந்தர்ப்பங்களில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர்.

இராணுவத்தினர், பொலிஸார் மீது அவர்கள் போர்நிறுத்த மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை நான் அறிவேன். ஆனால் ஒப்பீட்டளவில் அது குறைவானது. இருந்தபோதும் இராணுவத் தளபதி மீதான கொலைத் தாக்குதலுடன் இவற்றை ஒப்பிட முடியுமா?

கடந்த வியாழக்கிழமை கடற்படையினர் மீதான தாக் குதலை எதனுடன் ஒப்பிடமுடியும்? லக்ஷ்மன் கதிர்காமர் கொலையுடன் எதனை இணைத்துப் பார்க்க முடியும்? இந்தக் கொலைகளை எல்லாம் எதனுடன் இணைத்துப் பார்க்க?

சம்பூரில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையை நாம் மேற்கொண்டோம். ஏப்ரல் 25 ஆம் திகதி இராணுவத் தலை மையகம் மீது விடுத லைப் புலிகள் தாக்குதல் நடத்தி எமது இரா ணுவத் தளபதியைக் கொல்ல முயற்சித்தனர்.

அதே நேரத்தில் திருகோண மலையில் கடற்படையினர் மீது தாக் குதல் நடத்தினர். இவை பாரதூரமானவை மற்றும் நாட்டை அதிர்ச்சிக் குள்ளாக்கியவை.

இத்தகைய தாக்குதல்கள் மீண்டும் நடைபெறக்கூடாது. எமது நாட்டின் இறையாண்மையை யும், பிரதேச ஒற்றுமையையும் பாது காக்க வேண்டியது எனது பணி.

இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டி மக்கள் எனக்குத் தீர்ப்பளித்துள்ளனர். தென்பகுதி, வடக்கு அல்லது கிழக்கில் என எந்தப் பகுதி மக்களானாலும் அவர்களை நான் தொடர்ந்து பாது காக்க வேண்டும். இந்த நாட்டினது அனைத்துப் பகுதி மக் களையும் பாது காக்கும் பொறுப்பிலிருந்து விலகமுடியாது.

விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் நான் எமது நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பேன். அது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என எந்தப் பகுதியாக இருந்தாலும் இதே அர்ப்பணிப்பு டனேயே பாதுகாப்பேன்.

மட்டுப்படுத்த நடவடிக்கைக்கு நாம் உத்தரவிட்டது குறிப்பிட்ட சில நிலைகளை இலக்கு வைத்தேதான். எமது படைகள் மீதும் பொலிஸார் மீதும் எமக்கு முழு நம்பிக்கை உள்ளது. அதற்காக நாம் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என் பதாக அர்த்தம் இல்லை. மற்றொரு யுத்தம் வரக்கூடாது என்பதற் காகவே தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவத் தலைமையகம் மீதான தாக்குதலை நடத்தி எம்மீது பகிரங்கப் போர்ப் பிரகடனத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட் டுள்ளனர்.

ஆனால், பொறுப்புள்ள ஜனாதிபதி தலைவர் என்ற முறையில் போர்நிறுத்தத்தை தொடரவும், மதித்தும் செயற்பட வேண்டும். கௌரவமான தீர்வு என்பது எளிதாக அடைந்துவிட முடியாதது.

நோர்வே அனுசரணையாளர்கள் தங்களது பணியைச் சிறப்பாகவே செய்கின்றனர்.

எந்த ஒரு கட்சியையும் தவிர்க்காமல் அனைத்துக் கட்சி களையும் இணைத்துத்தான் தேசிய அரசாங்கம் அமைக்க முடியும். அது சூழ் நிலையைப் பொறுத்தது. அதற்கு அப்பால் தேசிய அரசாங்கம் என்பது சர்வாதிகாரத்துக்கான வழி வகுக்கக் கூடியது. அப்படியான ஒன்று நிகழ் வதை நான் விரும்பவில்லை.

எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்க வேண்டும். அதனது பார்வையையும் நாம் கேட்க வேண்டும். தடைகளும், சமன் களும் இருக்க வேண்டும். பொது விடயங்களில், பொதுத் தடத்தில் இணைவது என்பது வேறு.

இனப்பிரச்சினையில் நாம் அதைத் தான் செய்து கொண்டிரு க்கிறோம். பயங்கரவாதம் மற்றும் வன்முறைக்குத் தீர்வுகாண நாம் அதையே செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த வழிமுறையானது பொது விடயங்களில் ஒருமித்த கருத்தை பாரிய அளவில் ஏற்படுத்தும். இதிலும் பல்வேறு விமர் சனங்களுக்கு இடம் உண்டு.

விடுதலைப் புலிகள் தங்களது வன்முறைகளைக் கைவிட வேண்டும் என்று எப்போதுமே கூறிவருகிறேன். சர்வதேச சமூ கமும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இனப்பிரச்சினை என்பதை சர்வதேசப் பிரச்சினை யாக்கக்கூடாது என்பது என் தனிப்பட்ட கருத்து. அதற்கு உள் நாட்டிலேயே பேசி தீர்வுகாண வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் சர்வதேசத்தின் தலையீடு தேவையில்லை.

தமிழ் பேசும் மக்களது பிரச்சினை கள் என்ன என்பது எனக் குப் புரிகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டுவர வேண்டும். அவர்கள் எம்முடன் பேசவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அடுத்த 3 வாரங்களுள் பணிக்குத் திரும்புவேன்

## என்கிறார் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா



கொழும்பு —


அடுத்த மூன்று வாரங்களுக்குள் தான் மீண்டும் பணிகளுக்குத் திரும்ப விருப்பதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்ந்தும் இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இராணுவ வைத்தியசாலையில் இருந்தபடியே தொலைபேசி மூலம் நேற்று ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது -

மூன்று வாரங்களுக்குள் எனது அலுவலகத்துக்குச் செல்ல முடியுமென நம்புகிறேன். எனக்கு எந்தவொரு பகுதியும் செயலிழந்துபோகவில்லை. உடல் முழுமையாகவே இயங்குகிறதென அவர் மேலும் தெரிவித்தார்.



# அமெரிக்க ராஜாங்கப் பிரதிநிதி இலங்கைக்கு விஜயம்!

கொழும்பு —


அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் டொனால்ட் கம்ப் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

இரு தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் டொனால்ட் கம்ப் - அரசதரப்பு பிரதிநிதிகள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இந்த மாத இறுதியில் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இணைத் தலைமை நாடுகளின் மாநாடு, சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து அரசதரப்பு பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்துவார் என்றும் -

அத்துடன் இந்த விஜயத்தின் போது வர்த்தக சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

# பி.பி.சிக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்







லண்டன்

பி.பி.சி. நிறுவனம் இலங்கைப் பிரச்சினை தொடர்பான செய்திகளை வெளியிடும்போது - பக்கச்சார்பாகச் செயற்படுவதாகவும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து வருவதாகவும் சுமார் 200 சிங்களவர்கள் நேற்று லண்டனில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லண்டனிலுள்ள பி.பி.சி. நிறுவனத்தின் அலுவலகத்துக்கு முன்பாக சிங்கக் கொடிகள், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைத் தீவிரவாதத்துக்கு எதிரான இயக்கம் என்ற பெயரில் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மற்றும் சிங்களக் குழுக்களைச் சேர்ந்தோர் இந்தப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

'இலங்கையின் தீவிரவாதத்துக்கு உதவி வழங்குவதை பி.பி.சியே நிறுத்து' என்று எழுதப்பட்ட பாரிய பதாகை ஒன்றை வைத்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் - இலங்கைப் பிரச்சினையில் பி.பி.சி புலிகளுக்கு ஆதரவாகச் செய்திகளை வெளியிடுவ்தாகவும் குற்றம் சாட்டினர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், ஜே.வி.பி. ஆகியனவும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# படுகொலைகளைக் கண்டித்து பேரணியும், ஹர்த்தாலும்

கிளிநொச்சி —

தமிழர் தாயகப் பிரதேசத்தில் அதிகரித்துவரும் தமிழினப் படுகொலைகளைக் கண்டித்து இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி - ஐக்கிய நாடுகள் சபையின் கிளிநொச்சி செயலகத்தைச் சென்றடையும். அங்கு ஐ.நா.பொதுச் செயலாளருக்கான மகஜரை கிளிநொச்சி பொது அமைப்புகள் கையளிக்கவுள்ளன.

இதேவேளை கடந்த சில வாரங்களாக வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் மிகவும் மோசமான வன்முறைகள்- பொதுமக்கள் படுகொலைகளைக் கண்டித்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நாளை பூரண ஹர்த்தாலுக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ளது.

## நிலாவரையில்...

என அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முழுவதும் அந்தப் பகுதி மக்கள் நிலாவரைப் பகுதியிலுள்ள தோட்டங்கள், கிணறுகள் அனைத்திலும் தேடியபோதி லும் இருவரது சடலங்களும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## குடாநாட்டில்...

இதன்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

இதேவேளை, குளப்பிட்டிச் சந்தியில் வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது நேற்றுமாலை 6.45 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதலையடுத்து இராணுவத்தினரும் சில நிமிடங்கள் பதில் தாக்குதல் நடத்தியதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, உடுப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீது நேற்றிரவு 8 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்பின்னர் இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தியதுடன் இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள வீடுகளில் சல்லடைபோட்டு சோதனை நடத்தினர். இதன்போது ஏற்பட்ட சேத விபரம் எதுவும் தெரியவரவில்லை.

## மீசாலையில்...

தெய்வநாயகி (வயது 59), பிள்ளைகளான இரட்ணலோஜினி (வயது 33), உமாதேவி (வயது 31), செல்வதி (வயது 28), விஜயகலா (வயது 25) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் மீசாலையிலுள்ள வீட்டினுள் புகுந்த இராணுவத்தினர் இறந்தவர் ஒருவரின் பெயரை அழைத்து வீட்டினுள் ஆயுதங்கள் இருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று கூறி வீட்டைச் சோதனையிட்டனர்.

இதன்போது வீட்டிலிருந்த பாத்திரங்கள், உடுப்புப் பொதிகள், அலுமாரிகளை கடுமையாகச் சோதனையிட்டதுடன் வீட்டிலிருந்த ஆறுபேரையும் கடுமையாகத்தாக்கிவிட்டுச் சென்றனர்.

காயமடைந்தவர்கள் அயலவர்களின் உதவியுடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

# பாண் வியாபாரி வெட்டிக்கொலை

திருகோணமலை —

திருகோணமலை - மூதூரில் பாண் வியாபாரி ஒருவர் நேற்றுக் காலை வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றுக்காலை 7.35 மணியளவில் தோப்பூர் - தெகிவத்த சந்தியில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

தோப்பூரைச் சேர்ந்த அகமட் ரசூல் (வயது 35) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார். பாண் வியாபாரத்துக்காக சென்ற இவர் கூரான ஆயுதங்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இவருடைய சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. தோப்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிரடிப்படைமீது கோமாரியில் சூடு

அம்பாறை —

அம்பாறை - கோமாரி என்ற இடத்தில் விசேட அதிரடிப்படையினரின் தண்ணீர் பவுசர்மீது நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப்பட்டது.

பொத்துவில் விசேட அதிரடிப் படை முகாமுக்கு தண்ணீர் எடுக்கச் சென்ற பவுசர்மீதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

நேற்றுக்காலை 11.15 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் விசேட அதிரடிப்படைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்தார்.

# படையினர் மீது கிளைமோர் தாக்குதல்

நெல்லியடி —

கரணவாய் - மூத்தவிநாயகர் கோவிலுக்கு அண்மையில் இராணுவத்தினர்மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட் டது.

நேற்றுக்காலை பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் மூத்தவிநாயகர் கோவிலுக்கு அண்மையில் வீதி ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்தே இந்த கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதனையடுத்து குஞ்சர்கடைச் சந்தியிலிருந்து - நெல்லியடிச்சந்தி வரையிலான போக்குவரத்துக்கு இரு மணிநேரம் படையினர் தடைவிதித்தனர். இதனால் 750 இலக்கப்பாதையூடான போக்குவரத்து உடுப்பிட்டி வீதியூடாக நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இந்தச்சம்பவத்தின் பின்னர் கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற பகுதியை அண்டிய கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதுடன் இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## கைக்குண்டுத் தாக்குதல்; 9 முஸ்லிம்கள் படுகாயம்!

மட்டக்களப்பு —

அக்கரைப்பற்றில் முஸ்லிம்கள் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் 9 முஸ்லிம்கள் படுகாயமடைந்த னர்.

நேற்றிரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

# இராணுவத்துடன் இணைந்தே

கருணா குழுவினர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்துதான் செயற்படுகின்றனர் என்பதற்கான வலுவான ஆதாரங்கள் எங்களிடம் உண்டு. சில சமயங்களில் அவர்கள் அரச படையினருடன் இணைந்தும் செயற்படுகின்றனர்.

இராணுவத்தினரின் முகாமினுள் நடமாடும் கருணாகுழு உறுபினர்களை நீங்கள் கண்டீர்களேயானால் - அவர்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றனர் என்பதற்கான வலுவான ஆதாரமாக அது அமைந்துவிடும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் கருணா குழுவினரிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதென்பது ஆபத்தான விடயம்.

இந்த முயற்சியில் படையினர் இறங்குவார்களேயானால், அது பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். ஏனெனில், அவர்களும் ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண முடியுமென நான் நம்பவில்லை.

இராணுவ ரீதியில் தீர்வு எட்டப்பட முடியுமாயின் கடந்த 20 வருடங்களாக யுத்தம் புரிந்திருக்கத் தேவையில்லை.

விடுதலைப் புலிகளை போரின் மூலம் வெல்லமுடியாதென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்த கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

புலிகளை வெல்லும் திறன் அரசுக்கு இருக்குமாயின் ஏன் அவர்களால் இதுவரை புலிகளை வெற்றிகொள்ள முடியவில்லை? இதேபோல் அரசாங்கத்தை வெற்றிகொள்ளும திறனும் புலிகளுக்கில்லை. இதுவே இன்றுள்ள யதார்த்த நிலை என அவர் மேலும் தெரிவித்தார்.

# இணைத்தலைமை நாடுகளில் இந்தியா இணைய விரும்பவில்லை

கொழும்பு —

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் குழுவில் இணைவதற்கு இந்திய அரசாங்கம் விரும்பவில்லை என இந்தியாவின் பிரபல ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைக்கான ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகள் குழுவில் இந்தியா இணைய விரும்பவில்லை என்றும் இலங்கை சமாதான முயற்சிகளில் தீவிர முனைப்பு காட்டுவதற்கு விரும்பவில்லை என்றும் -

புதுடில்லியில் உள்ள அரசாங்கத்தின் உயர் நிலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இணைத்தலைமை நாடுகளின் குழுவில் இந்தியா இணையவேண்டும் என்று கேட்டதாக வெளியான செய்தியையும் அவர்கள் மறுத்துள்ளனர்.

இணைத்தலைமை நாடுகளுக்கு எந்த வகையில் உதவ முடியுமோ அந்த வகையில் உதவ வேண்டும் என்றுதான் இந்தியாவை யசூசி அகாஷி கேட்டுக்கொண்டார் என்றும் அவர்கள் கூறியதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கருணாகுழு...

செல்வக்குமார் (வயது 22) என்ற கருணாகுழு உறுப்பினர் நின்றிருந்தார்.

நேற்றுமாலை 4.40 மணியளவில் வைத்தியசாலைக்குள் பணியாளர்கள்போல் உட்புகுந்த ஆயுததாரிகள் இவர்கள் இருவரையும் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் கீதபொன்கலன் செல்வக்குமார் உயிரிழந்தார். அரசரட்ணம் சுரேஷ்குமார் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

9 ஆவது விடுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இங்கு இரணியன் என்ற இன்னொரு கருணாகுழு உறுப்பினரும் சிகிச்சைபெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.